# விவேகானந்தா கல்லூரி மாணவி மர்ம மரணம்

## நடவடிக்கை எடுக்க எஸ்எப்ஐ வலியுறுத்தல்

நாமக்கல், செப்.14-

விவேகனந்தா தொழில் நுட்ப கல்லூரியில் பயின்ற மாணவி காயத்திரி மர்மமான முறையில் இறந்தது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாமக்கல் ஆட்சியரிடம் இந்திய மாணவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மாணவர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஏ.டி.கண்ணன் மற்றும் நிர்வாகிகள் வினோத்குமார், ஆர்.சரத்குமார், பிரபாகரன் ஆகியோர் நாமக்கல் ஆட்சியரை நேரில் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருச்செங்கோடு, எளையாம்பாளையம், விவேகானந்தா தொழில் நுட்ப கல்லூரியில் பி.டெக் இரண்டாம் ஆண்டு படித்து வந்த வே. காயத்திரி மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளார். இந்த மாணவியின் மரணம் சம்பந்தமாக பல்வேறு முன்னுக்குப் பின்னான தகவல்களும், செய்திகளும் பரவி வருகிறது. விவேகானந்தா கல்லூரியில் சமீப காலத்தில் மட்டும் தொடர்ச்சியாக நான்கு மாணவிகள் தற்கொலை என்ற பெயரில் மர்ம மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இது சாதாரண பெற்றோர்கள் மத்தியிலும், மாணவிகள் மத்தியிலும் மிகுந்த அச்சத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலையில் 07.09.2012 அன்று கல்லூரியில் சக மாணவிகள், மாணவி வே. காயத்திரியின் மரணத்தின் மீது சந்தேகம் உள்ளது என்றும், அதன் மீது உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று கூறி கல்லூரியில் உள்ளிருப்புபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளை கல்லூரி நிர்வாகமும், காவல் துறையினரும் சேர்ந்து மிரட்டியதுடன், கேலி கிண்டலும் செய்துள்ளதுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளின் பெற்றோர்களுக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளை கல்லூரியில் இருந்து நீக்கப்போவதாகவும், வேறுமாதிரி பலி வாங்கப் போவதாகவும் கல்லூரி நிர்வாகம் மிரட்டியுள்ளது. மாணவிகளின் ஜனநாயக உரிமைகளை நசுக்கக் கூடிய இதுபோன்ற நடவடிக்கைகளை இந்திய மாணவர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் மாணவி வே. காயத்திரி மரணத்தில் பல சந்தேகங்கள் எழுகிறது. கடந்த 01.09.2012 ம் தேதி (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு தனது குடும்பத்தாரோடு மகிழ்ச்சியாக பேசிய வே. காயத்திரி, கல்லூரி சார்பில் நடத்தக்கூடிய மருத்துவ முகாமில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும் என்று என்னை வற்புறுத்துகிறார்கள் என்று தன் பெற்றோரிடம் கூறியுள்ளார். இது ஏன்? அவர் தங்கியிருந்த விடுதியின் அறையில் ஏழு மாணவிகளையும், அவரவர் வீட்டிற்கு அனுப்பி விட்டு வே. காயத்திரியை மட்டும் அவர் வீட்டிற்கு அனுப்பாமல் விடுதியில் இருக்க நிர்பந்தப்படுத்தியது ஏன்?

தற்கொலை நடந்து விட்டது என்றால் முதலில் காவல் துறைக்கு தகவல் தெரிவித்து, சம்பந்தப்பட்ட மாணவியின் பெற்றோர்களுக்கும் தகவல் தெரிவித்து, அவர்கள் வந்த பின்னர் புகைப்படங்கள், வரைபடங்கள் ஆகிய ஆய்வுகள் மேற்கொண்ட பிறகுதானே, காவல்துறையினர் பிரேத பரிசோதனைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். யாருக்கும் தெரிவிக்காமல் உடலை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றவர்கள் யார்? எதற்காக? மேலும் மாணவியின் மரணம் குறித்து அங்கு பணிபுரியும் ஊழியர்கள் முன்னுக்குபின் முரணாக பல தகவல்களை கூறி வருகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் மாணவியின் மரணத்தின் பின்னணி என்ன? என்பது குறித்து உரிய முறையில் விசாரித்திட வேண்டும். இதற்கு முன்பு இதே கல்லூரியில் தொடர்ச்சியாக நடைபெற்ற பல மர்ம மரணங்கள் மீதும் உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. மனுவை பெற்றுக்கொண்டு மேலும் பல விபரங்களை கேட்டு குறித்துக்கொண்டதோடு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் டி.ஜகந்நாதன் உறுதியளித்தார்.

# நாமக்கல்லில் ஆதித் தமிழர் பேரவையினர் மறியல்; போலீஸ் தடியடி

## பேருந்துக்கு தீவைப்பு


**நாமக்கல், செப்24:** திருச்செங்கோட்டில் தனியார் பொறியியல் கல்லூரி மாணவி தற்கொலை செய்து கொண்ட விவகாரத்தில் சிபிசிஐடி விசாரணை நடத்தக் கோரி, நாமக்கல்லில் ஆதித் தமிழர் பேரவையினர் திங்கள்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது கூட்டத்தைக் கலைக்க் போலீஸார் தடியடி நடத்தினர்.

இந்த நிலையில், பழுதாகி நின்றிருந்த அரசுப் பேருந்துக்கு தீவைக்கப்பட்டது. இதில் பேருந்து முழுவதும் எரிந்து சேதமடைந்தது.

திருச்செங்கோட்டில் உள்ள தனியார் மகளிர் பொறியியல் கல்லூரி 2-ஆம் ஆண்டு பி.டெக். மாணவி வெ.காயத்ரி, அண்மையில் கல்லூரி விடுதியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் உடலில் வெளிப்புற காயங்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், காயத்ரியின் சாவில் சந்தேகம் உள்ளதாகவும், இதுதொடர்பாக சிபிசிஐடி விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி, ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் ஆர்.அதியமான் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை காலை மறியலில் ஈடுபட்டனர்.





நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் சாலை மறியலில் ஈடுபட்டவர்களை தடியடி நடத்தி விரட்டும் போலீஸார். (வலது) நாமக்கல்- திருச்செங்கோடு சாலையில் நல்லிப்பாளையம் பாலம் அருகே தீப்பற்றி எரியும் அரசுப் பேருந்து.

நாமக்கல் - திருச்செங்கோடு சாலையில் தடையை மீறி நடைபெற்ற இந்தப் போராட்டத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மறியலைக் கைவிடும்படி டிஎஸ்பி அண்ணாமலை மற்றும் போலீஸார் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், போராட்டக்காரர்கள் மறியலைக் கைவிடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து, அதியமான் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளை போலீஸார் கைது செய்து வேனில் ஏற்றினர். அப்போது போலீஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போராட்டக்காரர்களில் பலர் வேலிகள், தடுப்புச் சுவர்களைக் கடந்து தப்பிக்க முயன்றனர். அவர்களை விரட்டிப் பிடிக்க முயன்ற போது, போராட்டக்காரர்கள் கற்களை வீசித் தாக்கியதால், போலீஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

இதையடுத்து, மறியலில் ஈடுபட்டதாக அமைப்பின் தலைவர் அதியமான், 17 பெண்கள், 2 குழந்தைகள் உள்பட 322 பேரை போலீஸார் கைது செய்து அருகிலிருந்த மண்டபத்தில் தங்கவைத்தனர்.

**அரசுப் பேருந்துக்கு தீ வைப்பு:** இந்த நிலையில், கும்பகோணத்திலிருந்து எடப்பாடி சென்று கொண்டிருந்த கும்பகோணம் கோட்ட அரசுப் பேருந்து திங்கள்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாமக்கல் - திருச்செங்கோடு சாலையில் நல்லிப்பாளையம் பாலம் அருகே பழுதாகி நின்றது.

பயணிகள் வேறு பேருந்துகளில் அனுப்பி வைக்கப்பட்ட பிறகு, பேருந்தின் பழுது சரிசெய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது பிற்பகல் 3 மணியளவில் திடீரென பேருந்தின் பின்பகுதியில் தீப்பற்றியது. சிறிது நேரத்தில் பேருந்து முழுவதும் எரிந்தது.

இதையடுத்து, திருச்செங்கோடு பிரதான சாலையில் வந்த அனைத்து வாகனங்களும் சிறிது தொலைவிலேயே நிறுத்தப்பட்டன. நாமக்கல் தீயணைப்புப் படை வீரர்கள் சென்று தீயை அணைத்தனர்.

**இருவரிடம் விசாரணை:** நல்லிப்பாளையம் பாலம் அருகே சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த இருவர் போலீஸாரிடம் சிக்கினர். அவர்களிடம், சேலம் சரக டிஐஜி சஞ்சய்குமார், நாமக்கல் மாவட்ட எஸ்.பி.பி.கண்ணம்மாள் தலைமையில் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்தவர்கள் பேருந்துக்கு தீவைத்திருக்கலாமா என்பது குறித்தும் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

**திருச்செங்கோட்டில் 17 பேர் கைது:** இதே கோரிக்கையை வலியுறுத்தி, திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம், அண்ணா சிலை அருகில் திங்கள்கிழமை மறியலில் ஈடுபட முயன்ற ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்த 17 பேர் கைது

# CB-CID probe sought into college student's death

TIMES NEWS NETWORK

**Namakkal:** Police had to resort to lathicharge to disperse Aathi Thamizhar Peravai (ATP) activists who staged a road block in front of the district collectorate on Monday. The protesters demanded a CB-CID investigation into the death of a college student who was found dead in her hostel room on September 3.

More than 1,000 activists gathered in front of the collectorate and shouted slogans alleging foul play in the death of V Gayathri (19), of Vivekanandha Engineering College in Tiruchengodu. Though the police tried to pacify them they refused to disperse and police lathicharged them.


More than 300 protesters including the founder of ATP, Era Athiyaman, were arrested and lodged in a marriage hall in the vicinity. Athiyaman alleged that Gayathri died due to injuries sustained in an assault by unknown persons in her hostel room. "The victim's friends told us that they had seen finger marks on her body and they suspected rape," he said.

However, college authorities maintained that the postmortem and forensic reports indicated that her death was a suicide.

Meanwhile the college bus was attacked by unidentfied people on Monday night. The driver was injured in the incident.

நாமக்கல்: மாணவி மர்மச்சாவு குறித்து நீதி கேட்டு போராட்டம்

# அருந்ததிய மக்கள் மீது போலீஸ் தடியடி



நாமக்கல், செப். 24—

விவேகானந்தா கல்லூரி மாணவி மர்மக்கொலை வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தி நாமக்கல்லில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆதித்தமிழர் பேரவையினர் மீது போலீசார் தடியடி நடத்தினர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட அதியமான் உள்ளிட்டோரை காவல் துறையினர் கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவனத்தின் பொறியியல் கல்லூரியில் கிருஷ்ணகிரி மாவட்டம் வெப்பாலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வெற்றிவேல் மகள் காயத்ரி என்பவர் பி.டெக் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார்.

கடந்த செப்டம்பர் 2ம் தேதி காயத்ரி தற்கொலை செய்து கொண்டதாக பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் அக்கல்லூரி மாணவிகள் காயத்ரியின் மரணத்தில் சந்தேகம் உள்ளதென தெரிவித்து, உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கல்லூரி நிர்வாகம் காலவரையற்ற விடுமுறை அறிவித்தது. மேலும் மாணவியின் மரணம் குறித்து அரசு நியாயமான முறையில் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் வலியுறுத்தி வந்தன. இதனிடையே, கல்லூரி திங்களன்று திறக்கப்பட்டது.

இந்நிலையில் ஆதித்தமிழர் பேரவை மற்றும் ஆதித்தமிழர் மக்கள் கட்சியின் சார்பில் சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிடக் கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அதியமான் பேசத்தொடங்கினார். இதையடுத்து அங்கு திரண்டிருந்தவர்கள் அதியமானின் பேச்சைக் கேட்க அமர்ந்தனர். அமைதியாக நடந்து கொண்டிருந்த போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்து அதியமான் உள்ளிட்டோரைக் கைது செய்தது.

இதன்காரணமாக ஏற்பட்ட பரபரப்பில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது போலீசார் திடீரென தடியடி நடத்தினர். இதனால் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஆட்சியரின் குறைதீர்க்கும் நாளில் மனு அளிக்க வந்தவர்கள் படுகாயமடைந்தனர். இதில் பல பெண்களும் கடுமையாக தாக்கப்பட்டனர். மேலும் கலைந்து ஓடியவர்களை சுமார் 2 கி.மீ. தூரம் துரத்திச் சென்ற காவல்துறையினர், அவர்களை கைது செய்து வாகனத்தில் ஏற்றினர்.

## தீண்டாமை ஒழிப்பு முன்னணி, மாதர் சங்கம் கண்டனம்

காவல்துறையினரின் இத்தகைய அட்டூழியத்தையும், நியாயமான கோரிக்கைகளுக்காக அமைதியாக போராடிய மக்கள் மீது காவல்துறை நடத்திய காட்டுமிராண்டித்தனமான தடியடித் தாக்குதலையும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது. இத்தகைய தடியடித் தாக்குதல் நடத்திய காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறும், மாணவி காயத்திரி மரணம் குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிடுமாறும் தமிழக அரசை தீண்டாமை ஒழிப்பு முன்னணி கேட்டுக் கொள்கிறது என்று முன்னணியின் மாநிலத் தலைவர் பி.சம்பத், பொதுச் செயலாளர் கே. சாமுவேல்ராஜ், கூறியுள்ளர்.

இத்தாக்குதலை அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கமும் வன்மையாகக் கண்டித்துள்ளது. சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.அமிர்தம், மாநிலப் பொதுச் செயலாளர் பி. சுகந்தி ஆகியோர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், மாணவி காயத்திரி மரணம் குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

25-9-2012
கோவை

# ஜனநாயக போராட்டத்திற்கு அனுமதி மறுப்பதா?

## போலீஸ் தடியடிக்கு சிபிஎம் கண்டனம்

நாமக்கல், செப். 24-

ஆதித்தமிழர் பேரவையினரின் ஜனநாயக ரீதியிலான போராட்டத்திற்கு அனுமதி மறுத்ததுடன், அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தடியடி நடத்தி காவல் துறை கைது செய்ததற்கு மார்க்சிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாமக்கல் மாவட்டச் செயலாளர் எ.ரங்கசாமி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

திருச்செங்கோடு விவேகானந்தா கல்லூரி மாணவி காயத்ரியின் மரணம் குறித்து சிபிசிஐடி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஆதித்தமிழர் பேரவை மற்றும் ஆதித்தமிழர் மக்கள் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் மற்றும் தொடர் முழக்கப் போராட்டம் நடத்துவது என அறிவிக்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் ஜனநாயக ரீதியாக நடைபெற இருந்த ஆர்ப்பாட்டத்திற்கு காவல் துறை அனுமதி மறுத்துள்ளது. இதனிடையே, திங்களன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்த போது அதியமான் உள்ளிட்ட பலரை கைது செய்து காவல் துறை வேனில் ஏற்றிச் சென்றது. மேலும், போலீஸ் திடீரென தடியடி நடத்தி தாக்கியதால், அங்கிருந்த இளைஞர்கள், பெண்கள் ஆகியோர் படுகாயத்துடனும், பயத்துடனும் அருகில் உள்ள ஊருக்குள் புகுந்துள்ளனர். இவர்களை 2 கிமீ துரத்தி சென்று 350 க்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அமைதியான ஆர்ப்பாட்டம், தொடர் முழக்கப் போராட்டம் என்பது ஜனநாயக ரீதியில் நடத்துகிற போராட்டமாகும். இப்போராட்டத்திற்கு அனுமதி மறுப்பது என்பது ஜனநாயக உரிமையை மறுப்பதாகும். எனவே, மாணவியின் மரணத்தில் உண்மையை வெளிக்கொண்டு வர அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாமக்கல் மாவட்டக்குழு சார்பில் கேட்டுக்கொள்வதுடன், காவல் துறையினர் அத்துமீறிய தாக்குதலை கண்டிப்பதுடன், கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மாவட்டச் செயலாளர் எ.ரங்கசாமி விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இச்சம்பவம், பெற்றோர் இவ்வாறு அவர் கூறினார். தெற்குத் தெருவில் உள்ள பட்டது.



திருச்செங்கோடு தனியார் கல்லூரியில், தற்கொலை செய்து கொண்ட மாணவி குறித்த வழக்கை, முறையாக விசாரிக்க கோரி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் நேற்று மறியலில் ஈடுபட்ட, ஆதிதமிழர் பேரவையினர் மீது தடியடி நடத்திய போலீஸார்.

## ...ப குறை கூறுவதா?
## ...ணாநிதி கண்டனம்

...தில்.



பின், ஐந்து ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட திட்டங்களால், மொத்தம், 7,798 மெகாவாட் மின்சாரம் கிடைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், 2011ம் ஆண்டில், தி.மு.க., ஆட்சி மாறியதும், பல திட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால், பயனுக்கு வராமல் உள்ளன. பொத்தாம் பொதுவாக, திராவிட கட்சிகளால் தமிழகம் என்ன வளர்ச்சி கண்டது என, தி.மு.க.,வையும் சேர்த்து குறை சொல்வது நல்லதல்ல.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆதித்தமிழர் பேரவையினர் மீது போலீஸ் தடியடியால் பரபரப்பு

**நாமக்கல்:** தனியார் கல்லூரி மாணவி தற்கொலைக்கு காரண மானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன், சாலையில் படுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, ஆதித்தமிழர் பேரவையினரை, போலீஸார் லேசான தடியடி நடத்தி கலைத்தனர்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகே தனியார் இன்ஜினியரிங் கல்லூரியை சேர்ந்த மாணவி காயத்ரி, இரு வாரங்களுக்கு முன், கல்லூரி விடுதியில், தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். 'அவரது சாவில் மர்மம் நிலவுகிறது, அதற்கான காரணத்தை கண்டறிந்து, சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என, ஒரு சில அமைப்பினர், தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இப்பிரச்னையை வலியுறுத்தி, நேற்று காலை, 11 மணியளவில், ஆதித்தமிழர் பேரவையினர், நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பேரவை நிறுவனர் அதியமான், ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்தார். அப்போது, மாணவி காயத்ரி தற்கொலைக்கு காரணமானவர்களை கைது செய்ய வலியுறுத்தி, கோஷம் எழுப்பியபடி இருந்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கான நேரம் முடிந்து விட்டதால், அனைவரும் போலீஸ் வேனில் ஏறும்படி, பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீஸார் தெரிவித்தனர். அதை ஏற்க மறுத்த பேரவையினர், சாலையில் படுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை, போலீஸார் வலுக்கட்டாயமாக இழுக்க முற்பட்டனர். அப்போது, தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த பேரவையினர், போலீஸாருக்கு எதிராக கோஷம் எழுப்பினர். இதையடுத்து, ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை, போலீஸார் லேசான தடியடி நடத்தி கலைத்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள், நாலாபுறமும் சிதறி ஓடினர்.

அவர்களை, போலீஸார் விரட்டிச் சென்று கைது செய்தனர். மொத்தம், 330 பேரை கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

NAVEENA NETRIKKAN

# நவீன நெற்றிக்கண்

₹.8/-

18-22 28.9.2012

சுற்றி நில்லாதே, போ பகையே...துள்ளி வருகுது வேல்!




## கல்லூரி மாணவி கற்பழித்துக் கொலை...

# கல்லூரி அதிபருக்கு போலீஸ் வலை!



## வேலூர் மாவட்ட கிரேனட் ஊழல்:

# இரண்டு கலெக்டர்கள் தி.மு.க. தலைவர்கள் விரைவில் கைது!



# ஈஷா ஆசிரமத்தில் குழந்தைகள் நரபலி!

— திடுக் தகவல்கள்!




## கல்லூரி மாணவி கற்பழித்துக் கொலை...


# கல்லூரி அதிபருக்கு போலீஸ் வலை!




நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டிலுள்ள விவேகானந்தா கல்வி நிறுவனம் ஆசியாவிலேயே பெண்களுக்கான சிறப்புக் கல்லூரி! 23,000 மாணவிகள், 5,000 ஆசிரியர்கள், 500 வாகனங்கள் என செயல்படும் மிகப்பெரிய கல்வி நிறுவனம். பெண்களுக்கான அனைத்து படிப்புகளும் ஒரே இடத்தில் அமைந்த நிறுவனம் எனப்பெயர் பெற்றது!

இது பெண்கள் மட்டுமே பயிலும் கல்லூரி என்பதால், பாதுகாப்பு என்பது மிகப் பலமானதாகவே இருக்கும். (கல்லூரி நிர்வாகிகள் எந்த நேரத்திலும் கல்லூரி வளாகத்தில் அனுமதிக்கப்படுவார்கள்) பயிலும் மாணவிகளின் அடையாள அட்டையில் உள்ள உறவினர்களைத்தவிர வேறு யாரையும் தங்கும் விடுதிக்கோ வளாகத்திற்குள்ளோ அனுமதிப்பதில்லை. இப்படியிருக்க, கடந்த 2.9.2012 தேதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், வெப்பாளம்பட்டி வெற்றிவேல் என்பவரின் மூத்த மகள் காயத்ரி என்பவர் மர்மமாக கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற புகாரினை இறந்த பெண்ணின் தந்தை மற்றும் உறவினர்கள் கூறினர்!

இதே காரணத்திற்காக 3.9.2012 அன்று திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் காயத்ரியின் சடலத்தை வாங்க மறுத்து, பிரேத பரிசோதனை சேலத்தில் நடந்ததாகவும், மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக மாணவிகளனைவரும் போராட்டத்தில் இறங்கியதால் தற்போது கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்தது!



கல்லூரி நிறுவனர் கருணாநிதி

இந்த மர்மமான இறப்பு தொடர்பாக காயத்ரியின் பெற்றோர் நம்மிடம் கூறுகையில், "கடந்த 25-8-2012 அன்று கல்லூரியில் ஏதோ மருத்துவ முகாம் நடைபெற்றதாகவும், இதில் கலந்து கொண்டவர்கள் 2.9.2012 அன்று நடைபெற்ற மற்றுமொரு மருத்துவ முகாமில் கலந்து கொள்ள வேண்டி கட்டாயப்படுத்தி 3 நாட்கள் விடுமுறையில் கூட ஊருக்கு அனுமதிக்கவில்லை. இதன் தகவலறிந்து கல்லூரியில் தொலைபேசியில் கேட்டபோது, எனது அறையில் (123) என்னைத் தவிர அனைவரும் ஊருக்கு சென்றுவிட்டனர். எனக்கு மருத்துவ முகாமில் கலந்து கொள்ள வேண்டும் எனக்கூறி விடுதி காப்பாளர் ஊருக்குச்செல்ல என்னை அனுமதிக்கவில்லை என காயத்ரி 1-9-2012 அன்று மதியம் 1 மணியளவில் புலம்பினாள் எனக்கூறினார்!

பின்னர் 2-9-2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் எனது உறவினரான கௌரிக்கு 9443764670 என்ற கைபேசி எண்ணிலிருந்து பேசியவர், உங்கள் உறவினர் பெண்ணான காயத்ரி தற்கொலை செய்து கொண்டார். அவரின் உடல் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் உள்ளது. எனக் கூறி தொடர்பை துண்டித்துவிட்டார். உடன் பதறியடித்துக்கொண்டு உறவினர்களனைவரும் திருச்செங்கோடு விரைந்தோம். நான் அரசுப் பேருந்தில் பணியில் சேலத்திலிருந்ததால் விடுப்பு பெற்றுக்கொண்டு, திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் மகளின் முகம், கழுத்து, மார்பு, கை, தொடை போன்ற பகுதிகளில் கீரல்பட்டு இரத்தம் கசிந்து இருந்தது!

இது தொடர்பாக திருச்செங்கோடு ரூரல் இன்ஸ்பெக்டர் ஈஸ்வரமூர்த்தியிடம் புகார் மனு கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்டு 174 (ஐ.பி.சி.)ன்படி



காயத்திரியின் பெற்றோர்

எப்.ஐ.ஆர். 606/12 பதிவு செய்தார். மேலும் அனைவருமே எங்களை சமாதானப்படுத்துவதில் மட்டுமே குறியாக இருந்தனர். எதனையும் ஏற்கமறுத்த நாங்கள், தொடர்ந்து நிர்வாகிகளை அழைத்தன் பேரில் பிரேதப்பரிசோதனையை சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையின் டீன் வள்ளிநாயகம் தலைமையிலான மருத்துவக்குழு நடத்தினர். ஆனால் அந்த பிரேத பரிசோதனை சான்றிதழில் (பி.எம்.எண். 1286/12 தேதி : 3-9-2012 தற்கொலை செய்து கொண்டதற்கான அடையாளங்கள் உள்ளதாகவும், உடலில் எவ்வித காயங்களும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறினார். எப்படி காயங்கள் மாயமானது என்று தெரியவில்லை? என கூறியபோது வெற்றிவேலின் வார்த்தைகள் தடுமாறி, கதறியழுதார்.

இந்த சந்தேக மரணம் தொடர்பாக திருச்செங்கோடு ரூரல் இன்ஸ்பெக்டரிடம் நாம் கேட்டபோது, கல்லூரி நிர்வாகத்தினர் காயத்ரியின் சடலத்தை மருத்துவமனைக்கு அனுப்பிய பிறகே எங்களுக்கு தகவல் கொடுத்தனர். அங்கே என்ன நடந்தது என எங்களுக்குத் தெரியாது எனக்கூறினார்.

இது தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தினரிடம் கேட்டபோது, "தேர்வில் 4 பாடங்களில் தோல்வியடைந்ததால் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொண்டார். நாங்களும் பிரேத பரிசோதனை அறிக்கை மூலமாகத்தான் இதனை அறிந்து கொண்டோம்" எனக்கூறி தொடர்பை துண்டித்தனர்.

இது தொடர்பாக சேலம் அரசு மருத்துவமனையின் டீன் வள்ளிநாயகத்தை தொடர்புகொண்டபோது, "தற்கொலை செய்து கொண்டதற்கான அடையாளங்கள் உடலில் தென்பட்டதாகவும், மேலும் விபரங்களுக்கு கெமிக்கல் ரிப்போர்ட்டுக்கும் ஹிஸ்டோ பெதாலஜிகல் ரிப்போர்ட்டும் கிடைத்தபின் உண்மை நிலை தெரியும்" என தெளிவுபடுத்தினார்.

திருச்செங்கோடு பகுதி மக்களிடம் விசாரித்தபோது, "அவ்வப்போது விவேகானந்தா கல்லூரியில் மாணவிகள் தூக்கிட்டு தற்கொலை, மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை, என பரபரப்பாக இருக்கும், ஆனால் இவையனைத்துமே சரி செய்து விடுகின்றனர். மேலும் கல்லூரி வளாகத்திலுள்ள போட்டோ ஸ்டுடியோவில் எடுக்கப்படும் புகைப்படங்களனைத்துமே கல்லூரி நிர்வாகத்தினருக்கு அனுப்பப்படுவதாக தகவலை தெரிவித்தனர். இத்துடன் கல்லூரி வளாகத்திலுள்ள அனைத்து கேண்டீன் மற்றும் கடைகளுமே நிர்வாகமே நடத்துவதாலும், ஒரு கிராமத்தையே பெரிய தடுப்புச்சுவரின் மத்தியில் இருப்பதாலும் எவ்வித பிரச்னையும் வெளிஉலகத்திற்கு தெரிவதில்லை. கல்வி நிறுவனத்தின் உரிமையாளரான கருணாநிதியின் மகன் கிருபாநிதிதான் இதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். உரிய முறையில் விசாரித்தால் உண்மை தெரியும் என்றனர்!

எதுவானாலும் இதுபோன்ற மர்மமான இறப்புகள் தொடர்ந்தால் நிர்வாகத்திற்கு சிக்கல் என்பதும் நிச்சயம். அம்மாவின் அரசு இதுபோன்ற செயல்களை பார்த்துக் கொண்டு சும்மாயிருக்காது என்பது மட்டும் உண்மை!

– சிவா

மேற்கு மண்டலம்



# தற்கொலை செய்த

'நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரு பிரபலக் கல்லூரியைச் சேர்ந்த பி.டெக். மாணவி காயத்ரியை, விடுதி அறையில் கற்பழித்துக் கொலை செய்து விட்டனர்' என்று, ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. விசாரித்தோம்.

கிருஷ்ணகிரி மாவட்டம், அனுமன் தீர்த்தத்தில் உள்ள காயத்ரி வீட்டுக்கு நேரில் சென்றோம். காயத்ரியின் அப்பா வெற்றிவேல் நம்மிடம், "நான் கவர்மென்ட் பஸ்ஸில் கண்டக்டரா இருக்கேன். மூத்த பெண் காயத்ரிக்கு கவுன்சிலிங் மூலம் ஸீட் கிடைச்சது. வீட்டில் இருந்து கல்லூரி தூரம் என்பதால், ஹாஸ்டல்ல சேர்த்தேன். மாசத்துக்கு மூணு நாட்கள் லீவு விடுவாங்க. அப்போ ஹாஸ்டலில் இருந்து எங்களுக்கு போன் பண்ணித் தகவல் சொல்வாங்க. எங்க ஊருக்கு வரும் காலேஜ் பஸ்ஸில் கொண்டுவந்து இறக்கி விடுவாங்க. போனவாரம் வெள்ளி, சனி, ஞாயிறு லீவு விட்டிருக்காங்க. ஆனா, எங்களுக்கு எந்தத் தகவலும் வரலை. பொண்ணும் ஊருக்கு வரலை. நான் வெள்ளிக்கிழமை காயத்ரிக்குப் போன் பண்ணும்போதுதான், 'மூணு நாள் லீவு விட்டிருக்காங்கப்பா. மெடிக்கல் கேம்ப் இருக்குன்னு சொல்லி என்னை வார்டன் இங்கேயே இருக்கச் சொல்லிட்டாங்க'னு சொல்லுச்சு. சனிக்கிழமை போன் பண்ணினேன். 'பரீட்சை இருக்கு. படிச்சுட்டு இருக்கேன். ஹாஸ்டல்ல எல்லோருமே ஊருக்குப் போயிட்டாங்கப்பா. நான் மட்டும்தான் இருக்கேன்'னு சொல்லுச்சு. அதுக்கப்புறம் திங்கள் கிழமை சாயந்திரம் ஹாஸ்டல்ல இருந்து போன் பண்ணி, 'உங்க பொண்ணு தூக்குப்போட்டு செத்துப்போயிட்டா'னு தகவல் சொன்னாங்க..." என்று கண் கலங்கினார்.

சற்று நேரம் கழித்து மீண்டும் பேசியவர், "திருச்செங்கோடு கவர்மென்ட் ஆஸ்பத்திரிக்கு எங்க ஊர் மக்கள் ஒண்ணு சேர்ந்து போனோம். யாருமே இல்லாத அனாதையைப் போல என் பொண்ணு உடம்பை அங்கே போட்டு வச்சிருந்தாங்க. சுடிதார் பேன்ட் கிழிஞ்சிருந்துச்சு. தொடையில, கழுத்தில் எல்லாம் கீறல் இருந்துச்சு. தலையெல்லாம் மண்ணு. தூக்குப் போட்டு செத்துப்போற பொண்ணுக்கு எப்படிங்க இப்படி இருக்கும்? அதுவும் இல்லாம அவ தூக்குப்

www.vikatan.com

## நாமக்கல் மாணவி மரணத்தில் மர்மம்

# உடம்பில், கீறல்கள் இருக்குமா?

போட்டுக்குற அளவுக்குக் கோழையும் கிடையாது. என் பொண்ணை மட்டும் ஏன் லீவுக்கு வீட்டுக்கு அனுப்பாம இருந்தாங்க? திட்டம் போட்டு அந்த காலேஜ்ல இருக்கும் சிலர்தான் என் புள்ளையை சின்னாபின்னமாக்கி இருக்காங்க.

திருச்செங்கோடு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். அங்க இருந்த இன்ஸ்பெக்டரு, 'நீ எந்த செக்‌ஷன்ல கேஸ் போடச் சொல்றியோ... போடுறேன். சாலை மறியல் வேணும்னாலும் பண்ணுங்க. ஆனா, காலேஜ்ல இருந்து யாரும் வர மாட்டாங்க. என்னால அவங்களை அரெஸ்ட் பண்ணவும் முடியாது. அது ரொம்பப் பெரிய இடம். பேசாம பொண்ணை எடுத்துட்டுப் போய் அடக்கம் பண்ணிட்டுப் பொழைக்கிற வழியைப் பாருங்க'னு கூசாமச் சொன்னார்.

அந்த காலேஜ்ல படிக்கிற பொண்ணுங்க பல பேரு எனக்குப் போன் பண்ணி, 'அப்பா காலேஜ் கொடுக்குற காசுக்கு விலை போயிடாதீங்க. உங்க பொண்ணு மாதிரி இங்கே பல பொண்ணுங்க செத்திருக்காங்க. ஆனா, எந்த விஷயமும் வெளியே வராம அமுக்கிட்டாங்க'னு அழுதாங்க. இந்த ஏழைப்பட்டவனால என்னங்க செய்ய முடியும்?" என்று அழ ஆரம்பித்தார்.

காயத்ரியோடு படிக்கும் மாணவிகள் சிலரிடம் பேசினோம். "ஹாஸ்டலுக்குள் அவ்வளவு எளிதில் யாரும் போய்விட முடியாது. மேனேஜ்மென்ட் ஆட்கள்தான் உள்ளே வந்திருக்க முடியும். அப்படி யார் வந்தாலும் நிச்சயமா வார்டனுக்குத் தெரிந்துதான் வந்திருப்பார்கள். வார்டனை விசாரித்தால் முழு உண்மை தெரியவரும்" என்றார்கள்.

காயத்ரி மரணத்துக்கு நீதி கேட்டு, கல்லூரியில் படிக்கும் மாணவிகள் இரண்டு நாட்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தவே, கல்லூரியைக் கால வரையின்றி மூடி இருக்கிறது நிர்வாகம்.

கல்லூரியின் நிர்வாகியிடம் பேசினோம். "போஸ்ட்மார்ட்டம் அறிக்கைப்படி காயத்ரி உடம்பில் எங்கேயும் காயம் இல்லை. கற்பழிப்பு நடக்கவும் இல்லை. கழுத்து எலும்பு இறுக்கப்பட்டதால்தான் மரணம் நிகழ்ந்திருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நாங்கள் கல்லூரிக்கு லீவு விட்ட பிறகும், நிறைய அரியர்ஸ் இருந்ததால் படிக்க வேண்டும் என்று அந்தப் பெண்தான் ஊருக்குப் போகாமல் ஹாஸ்டலில் இருந்திருக்கிறார். காயத்ரியின் அப்பா, 'சரியாகப் படிக்கவில்லை' என்று போனில் திட்டி இருக்கிறார். அந்த வருத்தத்தில்தான் தூக்குப் போட்டு தற்கொலை செய்திருக்கிறார்" என்று சொன்னார்.

திருச்செங்கோடு புறநகர் காவல் நிலைய ஆய்வாளர் ஈஸ்வரமூர்த்தியிடம் கேட்டபோது, "நான் யாருக்கும் சாதகமாவோ, பாதகமாவோ நடந்துக்க மாட்டேன். நியாயம் யார் பக்கம் இருக்கிறதோ அந்தப் பக்கம்தான் நாங்க இருப்போம். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் காயத்ரி கற்பழிக்கப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. காயத்ரி குடும்பத்தினர் ஆதங்கத்தில் பேசுகிறார்கள்" என்றார்.

தன்னுடைய நேர்மையை கல்லூரி நிர்வாகம்தான் நிரூபிக்க வேண்டும்!

- வீ.கே.ரமேஷ்

www.vikatan.com